**செய்தி வெளியீடு எண்: 529** **நாள்: 22.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (22.7.2020) முன்னாள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. H.V. ஹண்டே அவர்களுக்கு, நன்றி தெரிவித்து எழுதிய கடிதத்தின் விவரம் பின்வருமாறு.

---

“தாங்கள் எனக்கு அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

‘ஊக்கத்தைத் தவிர வேறு எதனையும் நிலையான உடைமை என்று கூற இயலாது’ என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்கவும், ‘லட்சியத்தில் உறுதி’ என்ற குறிக்கோளுடனும், தமிழ்நாட்டு மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், செயல்பட்டு வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, குறுகிய காலத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் அமைத்ததற்காக என்னைப் பாராட்டி தாங்கள் குறிப்பிட்டுள்ள வார்த்தைகள் எனக்கு மேலும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளித்துள்ளன.

மூத்த அரசியல்வாதியும், புரட்சித் தலைவரின் இதயத்தில் இருந்தவருமான, தாங்கள் என்னை பாராட்டி, வாழ்த்தியமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டும் என இத்தருணத்தில் இறைவனை வேண்டுகிறேன்.”

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**